# அரசியலும் வன்முறையும்



மிலிந்த மொரகொட

மஞ்சள் கோடு இருப்பது பாதையை கடப்பதற்கு அது சட்டமாகும். சட்டத்தை மீறினால் தண்டனை. பாதையில் எச்சில் துப்புவது தடை செய்யப்படவுள்ளது. அதிக சத்தத்துடன் ஒலியை எழுப்பும் சாரதிகளுக்கு தண்டனை கொடுக்கத் தயார். ஏன் இப்படி? நாட்டை வளப்படுத்த மற்றவர்களுக்கு தொல்லை கொடுக்காத சமூகத்தை உருவாக்க பொதுமக்கள் மட்டும்?

மக்களின் வாக்குகள் மூலம் அரசியல்வாதிகள் மக்களுக்கு மேலாக ஆட்சி அதிகாரத்தில் ஏறுகிறார்கள். தேர்தலில் வெற்றி பெறுவது அதிகாரத்துடன். இந்த அதிகாரம் கிடைத்தது மக்களின் சேவைக்காக. பொதுமக்களின் பணிவான சேவையாளர்கள். இன்று அந்த நிலைமை இல்லை. அதிகாரத்துக்கு வரும் அவ்வாறான அரசியல்வாதிகளுக்கு

சட்டம் பொருந்துவதில்லை. அவ்வாறு நடப்பது எவ்வாறு? அதிகாரம் கொடு ப்பது பொதுமக்கள். இவர்களின் அதிகாரத்துடன் பலாத்காரமும் இணைந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை கையில் எடுப்பது பிரச்சினையாகும். அதிகாரத்தை கொடுக்கும் பொதுமக்கள் அமைதியாக இருப்பது அதை விட பிரச்சினையாகும். அரசியல்வாதிகள் பற்றிய பொதுமக்கள் மதிப்பீடு தவறானதொன்றாகும். அனைத்து அரசியல்வாதிகளும் திருடன், ஏமாற்றுபவர், அநியாயக்காரர்களை காப்பாற்றுபவர்கள். அவ்வாறு இல்லையாயின் சட்டத்தை மீறும், அதிகாரத்தை உச்சளவில் பயன்படுத்துபவர். கீழ் மட்டத்தில் உயர்ந்த இடம் வரை நாட்டின் நிலை இதுவாகும்.

நல்ல நேர்மையான நபர் ஒருவர் அரசியலுக்குள் நுழைவது நல்ல எண்ணத்துடன். மிகவும் விரைவில் இந்த கலாசாரத்துக்கு பலிக்கடாவாகிறார். அவ்வாறு இல்லாதிருப்பது எவ்வாறு? வாக்களித்த மக்கள் அனைத்தையும் எதிர்பார்ப்பது அரசியல்வாதிகளிடமிருந்து. பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்ப்பது, வெளிநாட்டுக்கு பாய்வதற்கு, வீசா எடுப்பதற்கு, வேலை, இடமாற்றம், அவ்வாறு இல்லையாயின் பதவி உயர்வுக்காக கட்சிக்காரர்கள் செல்வது அரசியல்வாதிகளிடம். பொது வேலை செய்ய நேரமில்லை. கொள்கையை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட பிரதிநிதிய கடமை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது. அடுத்த முறை வெற்றி பெறுவதற்கு கட்சி ஆதரவாளர்களை திருப்திப்படுத்த வேண்டும். சட்டம், நேர்மையில் பலனில்லை. தமது தேவைகளை பூர்த்தி செய்யும் மக்கள் பிரதிநிதி வீரராவார்.

மக்கள் பிரதிநிதி அதிகாரத்தை கையில் எடுப்பதே அவ்வாறே. வேலை பெறுவது பலாத்காரத்தில். சட்டம் ஒரு மூலையில், அதிகாரிகள் பலமிழந்தவர்களாவர். டெங்குக் குடம்பிகள் வீட்டு வளவில் கண்டுபிடிக்கப்பட்டால் வறியவர்களை சிறைக்கு அனுப்பும் நாடு. ரி-56 இனால் ஆகாயத்தை நோக்கி சுடும் அரசியல்வாதிகளுக்கு கிடைப்பது அதிகாரம். பொதுமக்கள் அதிகாரத்தை கொடுக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் அதிகாரத்தை கையில் எடுக்கிறார்கள். அரசியலுடன் வன்முறை ஒன்றிணைவது ஒரு இரவில் அல்ல. இங்கு காட்டப்படுவது முறை பிறழ்வையாகும். மீண்டும் திரும்புவது அவசியமானது. பொதுமக்களை மதிக்கும் அரசியல், ஆதரவாளர்களை பராமரிக்கும் அரசியல்வாதிகளுக்காக நாட்டைக் கட்டியெழுப்பும் அரசியல் முறைமை, பிரஜைகளுக்கு சட்டம், நீதி சமனாக கிடைக்கும் சமூகம். இந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

பொதுமக்கள் மதிப்பளிக்கும் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவது அரசியல் கட்சிகளின் கடமையாகும். கட்சித் தலைவர்கள் தனது அங்கத்தவர்களின் ஒழுக்கம் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். விசேடமாக அரசியலுக்கு வரும் இளம் சந்ததியினருக்கு எங்கிருந்தேனும் ஒரு தொடக்கம்; அவசியம். அரசியல்வாதிகளை அதிகாரத்திற்கு கொண்டுவரும் பொதுமக்களும் அதில் பங்காளிகளாக முடியும்.

மிலிந்த மொரகொட
www.milindaprashna.wordpress.com.